**வில்கமுவ பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வில்கமுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 85,061 ஆல் நூலகப் புத்தகங்கள் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) “e” நென பியச பயிற்சி நிலையத்தின் வருமானம் மறறும் செலவினம் வெவ்வேறான அலகாக இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு சீராக்கப்பட வேண்டிய போதீலும் மீளாய்வாண்டின் வருமானமான ரூபா 124,873 தொகை 6/43 வருமானத் தலைப்பின் கீழும் செலவினமான ரூபா 365,858 நானாவித செலவினங்களின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதி பொது களஞ்சிய இருப்பாக ரூபா 65,434 கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக ரீதியாக அவ்வாறான இருப்பொன்று காணப்படவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 34,984,372 கூட்டுத்தொகையான 5 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடனும் ஒப்பீடு செய்த போது அவதானிக்கப்பட்ட அசாதாரணங்களின் பெறுமதி ரூபா 2,097,403 கூட்டுத்தொகையாக இருந்தது.

### 1.3.4 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 6,106,338 தொகையான தொங்கல் கணக்கின் மீதிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 7,840,362 ஆன வரவு மற்றும் ரூபா 7,080,008 செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதி மீதி ரூபா 760,895 ஆக இருந்ததுடன் வருடக் கணக்காக இருந்து தொங்கல் கணக்கு தொடர்ச்சியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டு வருவதுடன் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமுராது முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 902,054 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 04 கணக்கு மீதிகள் மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 3,612 தொகையான கணக்கு மீதியை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 11,471,026 தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே விபரமாகக் காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி 217 | சபைக்குச் சொந்தமான சபையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள தொடர்பாக பீஎல் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டி ருக்கவில்லை. |
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | விலைகோரல் மூலம் போட்டி ரீதியான காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளாமல் காப்புறுதி முகவர் மூலம் சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களை காப்புறுதி செய்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 26,037 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. |
| (இ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் பிரமாணங்களுக்கு இணங்க 1523/16 ஆம் இலக்க 2008 இன் சனவரி 25 ஆந் திகதிய | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய உலர்ந்த செயற்பாடுடன் கூடிய நெல் ஆலை, தானிய அரைக்கும் ஆலைகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் "ஈ" பகுதி | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 08 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,957,360 பெறுமதியான முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,553,766 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,576,228 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,022,462 ஆன வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 15 கட்டிடங்கள் தொடர்பாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் வீத வரி வருமானம் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அரச நிறுவனங்னளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி கட்டணங்களாக ரூபா 101,484 அறவிடப்பட வேண்டியிருந்தது.

#### 2.2.2 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மாதாந்த கடை வாடகை ரூபா 236,253 தொகை, நிலுவை கடை வாடகை ரூபா 660,816 மற்றும் கடல் மீன் கடை வாடகை ரூபா 3,000 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபை அதிகாரப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட முச்சக்கர வண்டிகளிலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டணமாக ரூபா 818,150 அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,888,925 தொகையும் ரூபா 82,000 முத்திரைக் கட்டணங்களாகவும் இருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற, மரணித்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 7 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 83,421 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதிப் பதப்படுத்தல் சேவையில் ஈடுபடும் போது முறையான மேற்பார்வையொன்று காணப்படாமல் இருந்ததுடன் ஓட்டக் குறிப்புகள் வைத்துக் கொள்ளல் மற்றும் அவற்றை நாளாந்தம் நிர்வாக உத்தியோகத்தர் ஊடாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. வீதிப் பதப்படுத்தலுக்கான நபர்கள் / நிறுவனங்கள் வழங்கும் எரிபொருளை ஓட்டக் குறிப்புகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டில் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த 273 கல்வனைஸ் குழாய்களில் 17 காணாமல் போயிருந்தன.

(ஈ) வில்கமுவ பிரதேச சபைக்குரிய கெப் வண்டி 2013 மார்ச் 22 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம், 2014 ஏப்ரல் 04 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய பிரதேச சபை தலைவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 16,705 தொகையை மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 14 பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் சபையின் செயலாற்றல் தொடர்பில் அது நேரடியாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபைக்கு சொந்தமான 5 வாகனங்கள் 10 வருட காலமாக விளைவற்று காணப்பட்டன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**ஹெட்டிபொல சிறுவர் பூங்கா அபிவிருத்தி செய்தல்**

உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளின் கீழ் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,200,000 ஆன நிதிஏற்பாடுகளின் கீழ் ஹெட்டிபொல சிறுவர் பூங்கா அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் நிலம் சமதரையாக்கப்படாயைாலும் புற்கள் படர்ந்திருந்தமையாலும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது.

**3.4 செயற்திட்ட தாமதம்**

2016 பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட ரூபா 500,000 ஆன 2 நிர்மாணங்கள் நிதியேற்பாடு போதாமையால் மீளாய்வாண்டில் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.

**3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் 1 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகள் வகைப்படுத்தப்படாது சேகரித்து அரச காணியில் இடப்பட்டு வருவதால் அக்கழிவுகளை மிருகங்கள் உணவாக கொள்வதால் மிருகங்கள் இறப்பதற்கு இடமிருப்பது உட்பட சுற்றுப்புற சுற்றாடல் அசுத்தமாக இருப்பதும் அவதானிக்கப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் எவ்வித கணக்காய்வு ஐயவினாவொன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2014 ஆகஸ்ட் 8 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் ஒரு கூட்டமேனும் கூட்டப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் நிர்வாகம்
(ஆ) வருமான சேகரிப்பு
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்